©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 24] சென்னை, புதன்கிழமை, ஜூன் 29, 2011
ஆனி 14, திருவள்ளுவர் ஆண்டு–2042

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

#### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 247, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, நாள்: 2 டிசம்பர் 2010.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழும், மேற்படி சட்டத்தின் 9ஆம் பிரிவின்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பின்னலாடை தொழிற்சாலை வேலைவாய்ப்புகளுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை நிர்ணயிப்பதைப் பொறுத்தமட்டில், விசாரணைகள் நடத்துவதற்கும், மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்குமென பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றினை இதனால் நியமிக்கிறார்.

**A. தனிப்பட்ட நபர்கள்:**

(1) தொழிலாளர் நல இணை ஆணையர், கோயம்புத்தூர். – தலைவர்

(2) தொழிலாளர் நல ஆய்வாளர், கோயம்புத்தூர். – செயலாளர்

(3) உதவி இயக்குநர், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல், இயக்குநர் அலுவலகம், சென்னை–600 006. – உறுப்பினர்

**B. தொழிலதிபரின் பிரதிநிதிகள்:**

(1) திரு. பி. கோபி, கிரேஸியஸ் நிட்ஸ், 9–A, சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தொழிற்பேட்டை, ஹார்வி ரோடு, திருப்பூர்–2. – உறுப்பினர்

(2) திரு. எஸ். கோவிந்தப்பன், 34, ட்டி. எஸ். ஆர். லே அவுட், 2–வது தெரு, திருப்பூர்–641 607. – உறுப்பினர்

(3) திரு. வி. பழனிசாமி, ராணி டெக்ஸ், 22, ஆஷா நகர், 3வது தெரு, திருப்பூர்–641 603. – உறுப்பினர்

(4) திரு. எம். சூரியகுமாரன், — உறுப்பினர்
எண் 6, இரணாடம் குறுக்குத் தெரு,
ஊரப்பாக்கம்—603 202.

**C. தொழிலாளர்களின் பிரதிநிதிகள்:**

(1) திரு. எம். சந்திரன், — இந்திய தொழிற் சங்க மையம்
447, அவினாசி சாலை,
திருப்பூர்—2.

(2) திரு. A. சிவசாமி, — இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்
இந்திரா பவன், 109, பி.என். சாலை,
திருப்பூர்.

(3) திரு. C. பழனிசாமி, — தமிழ்நாடு அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ்
502, பி.என். சாலை,
திருப்பூர்—641 602.

(4) திரு. கே. இராமகிருஷ்ணன், — தொழிலாளர் முன்னேற்ற அணி
79, பாவேந்தர் பாரதிதாசன் நகர்,
காந்தி நகர் அஞ்சல்,
திருப்பூர்—641 603.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி,*
*அறநிலையங்கள் மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 26, தொழிலாளர் மற்றும் வேலைவாப்பு (M2)த் துறை, நாள்: 14 பிப்ரவரி 2011.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) 8ஆம் பிரிவைச் சேர்ந்த (2A) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 10—3—1993ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II, பிரிவு 2—இல் 299 மற்றும் 300ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட 5—2—1993ஆம் நாளிட்ட II(2)/LE/1233/93ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு உதவுவதற்காகவும், கீழேயுள்ள விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மேற்சொன்ன சட்டம் மற்றும் தமிழ்நாடு 1950ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகள் ஆகியவற்றின் கீழ் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை இதனால் நியமிக்கிறார்.

**விவர அட்டவணை**

| *தொடர்* | *அதிகாரிகள்* | *அதிகாரங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகம், சென்னை—600 005 | மேற்சொன்ன விதிகளின் 58(2) ஆம் பிரிவு மற்றும் 81,82 ஆகிய பிரிவுகள் |
| 2 | தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர், சென்னை | மேற்சொன்ன சட்டத்தின் 6,7,16,19,25,28,44,55 மற்றும் 65ஆம் பிரிவுகள் |
| 3 | தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர், கோயம்புத்தூர் | விதி 3—250 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு, 1000 தொழிலாளர்கள் வரையில் வேலையில் அமர்த்துகிற தொழிற்சாலைகளைப் பொறுத்த நேர்வில், திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல். |

| *தொடர் எண்* | *அதிகாரிகள்* | *அதிகாரங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 4 | தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர், மதுரை | மேற்சொன்ன சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் மற்றும் மேற்சொன் விதிகளின் 95ஆம் விதியின் கீழ் ஆபத்தான செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 2(cb) பிரிவின் கீழ் அபாயகரமான செயல்முறை தொழில்கள் என்று வகைப்படுத்தப்பட்டு, மேற்சொன்ன சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழிற்சாலைகள் இதில் அடங்காது.<br>விதி 65(3)<br>விதி 72(2)<br>விதி 73(2)<br>மேற்சொன்ன தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் அளித்தல். |
| 5 | தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி. | மேற்சொன்ன விதிகளின் விதி, 4, 11(3), 55A(4A), 62–A, 72, 73, 94–A, 103–B மற்றும் 107. |
| 6 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், I கோட்டம், சென்னை. | மேற்சொன்ன சட்டத்தின் 6,7,18,65, மற்றும் 71ஆம் பிரிவுகள். |
| 7 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், II கோட்டம், சென்னை. | |
| 8 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், III கோட்டம், சென்னை. | |
| 9 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், IV கோட்டம், சென்னை. | விதி 3–250 தொழிலாளர்கள் வரையில் வேலையில் அமர்த்துகிற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் ஒப்புதலளித்தல். ஆனால், மேற்சொன்ன சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ் மற்றும் மேற்சொன்ன விதிகளின் 95ஆம் விதியின் கீழ் ஆபத்தான செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 2(cb) பிரிவின் கீழ் அபாயகரமான செய்முறை தொழில்கள் என்று வகைப்படுத்தப்பட்டு, மேற்சொன்ன சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் இதில் அடங்காது. |
| 10 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், திருவள்ளூர். | |
| 11 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், திருவொற்றியூர். | |
| 12 | சென்னை, காஞ்சிபுரத்திலுள்ள தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர். | |
| 13 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், I கோட்டம், வேலூர். | |
| 14 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், II கோட்டம், வேலூர். | |
| 15 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், கடலூர். | விதி 72(2) மேற்சொன்ன தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் அளித்தல். |
| 16 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், சேலம். | விதி 73(2) |
| 17 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், ஒசூர். | மேற்சொன்ன விதிகளின் விதி 4,15,24,29,32,44,51,62(7), 62–A, 63,77 மற்றும் 78–B. |
| 18 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், ஈரோடு. | |
| 19 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், திருப்பூர். | |
| 20 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், I கோட்டம், கோயம்புத்தூர். | |

| *தொடர் எண்* | *அதிகாரிகள்* | *அதிகாரங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 21 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், II கோட்டம், கோயம்புத்தூர். | |
| 22 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி. | |
| 23 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், தஞ்சாவூர். | |
| 24 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், மதுரை. | |
| 25 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், திண்டுக்கல். | |
| 26 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், சிவகாசி. | மேற்சொன்ன சட்டத்தின் 6,7,18,65 மற்றும் 71ஆம் பிரிவுகள். |
| 27 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், விருதுநகர். | |
| 28 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், திருநெல்வேலி. | விதி 3–250 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு 1000 தொழிலாளர்கள் வரையில் வேலையில் அமர்த்துகிற தொழிற்சாலைகளைப் பொறுத்த நேர்வில், திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல். மேற்சொன்ன சட்டத்தின் 87ஆம் பிரிவின் கீழ், மற்றும் மேற்சொன்ன விதிகளின் 95ஆம் விதியின் கீழ், ஆபத்தான செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ள மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 2(cb) பிரிவின் கீழ், அபாயகரமான செய்முறை தொழில்கள் என்று வகைப்படுத்தப்பட்டு, மேற்சொன்ன சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழிற்சாலைகள் இதில் அடங்காது. |
| 29 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், தூத்துக்குடி. | |
| 30 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், (சோதனை மற்றும் பாதுகாப்பு), தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகம், சென்னை. | |
| 31 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு), தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகம், சென்னை. | |
| 32 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், (பதிவு) தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர் அலுவலகம், சென்னை. | விதி 72(2) மேற்சொன்ன தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் அளித்தல். விதி 73(2) |
| 33 | தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர், (பதிவு) தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர் அலுவலகம், கோயம்புத்தூர். | மேற்சொன்ன விதிகளின் விதி 4,15,24,29,32,44,51,62(7), 62–A, 77 மற்றும் 78–B |
| 34 | தொழிற்சாலைகளின் துணை தலைமை ஆய்வாளர், (பதிவு) தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர் அலுவலகம், மதுரை. | |

**ட்டி. பிரபாகர ராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி,*
*அறநிலையங்கள் மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.